[29th January 1972

Unemployed Engineering Graduates

* 63 Q.—THIRU G. SWAMINATHAN and THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of unemployed engineering graduates in the State as on date; and

(b) the steps taken by the Government to solve their unemployment problem ?

வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இன்றுவரை வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்களது வேலையில்லாச் சிக்கலைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 2,822 (30—9—1971 அன்று உள்ளபடி).

(இ) வேலையற்றிருக்கும் பொறியாளர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு வசதியளிக்க அரசு அண்மையில் பாசன மின்சக்தித்திட்டங்களை ஆய்வு செய்யும் பணியையும் நிறைவேற்றும் பணியையும் மேற்கொண்டுள்ளது. அத்துடன் 600 பொறியியல் பட்டதாரிகளுக்குத் தொழில் பழகுவோர்க்குரிய பயிற்சியளிக்கும் திட்டம் 1970 அக்டோபரில் அரசு ஒப்புதல் பெற்றுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: கடந்த 3, 4 ஆண்டுகளாக வேலையில்லாத பொறியியற் பட்டதாரிகள் தொகை அதிகரித்து வருகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சொல்லாமலே அது விளங்கும்.

Rural Housing Scheme

* 64 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Union Government have undertaken the entire cost of Rural Housing in this State; and

(b) if so, the details thereof ?

கிராமப் புற வீடு கட்டும் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?